''தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு பற்றிய 54–ஆம் எண். மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 18,68,63,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'' என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க, (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெற்றது.

முற்பகல் 11-15.

3. அவை நடவடிக்கைகளைத் திரித்து, வேறு பொருள் வருகிற வகையிலோ திசை திருப்புகிற வகையிலோ செய்திகள் வெளியிட வேண்டாமென்று பத்திரிகைகளுக்கு வேண்டுகோள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல் அமைச்சரவர்கள் பதிலுரை தெரிவிக்கிறபோது, பத்திரிகையாளர்கள் அவையில் நடைபெறுகிற சில விவாதங்களைத் திரித்தும் வேறு பட்டபொருள் அமைகிறபடியும் செய்திகள் வெளியிடுவது பற்றிய தன்னுடைய மனவருத்தத்தை இங்கே வெளியிட்டார்கள். மாண்புமிகு முதல் அமைச்சரவர்களுடைய அந்தக் கருத்தை ஏற்று பத்திரிகையாளர்களுக்கு நானும் அந்த வேண்டுகோளை எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். பொதுவாக இந்த அவை என்பது தன்னாட்சி உரிமை மிக்க ஓர் அவை என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். பத்திரிக்கை சுதந்திரத்தைப் பேணி காக்க வேண்டும், பத்திரிகைகளுக்கு அத்தகைய உரிமைகள் வழங்கப்பட வேண்டுமென்பதில் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கடந்த 8, 9 மாதக்காலமாக இந்த அவையிலும், வெளியிலும் மிகத் தெளிவாக சில கருத்துக்களைச் சொல்லி வருகிறார்கள். பத்திரிக்கைகளே எங்களுக்கு எதிர்க்கட்சியாக இருந்தால்கூட வரவேற்கிறோம் என்று, அந்த அளவுக்குக் கூறி வந்திருக்கிற ஒரு முதலமைச்சர் இந்த அவையில் நடைபெற்ற ஒரு விவாதத்திலே கலந்து கொண்டு பேசியதைத் திட்டமிட்டு இப்படித் திசை திருப்புகிற வகையில் வெளியிடுவது தவறான முன்னுதாரணத்தை உண்டாக்கும் என்பதைப் பத்திரிகைத் துறையினருக்குத் தெரிவித்துக்கொள் கிறேன்.

ஏற்கெனவே இதைப்போல 2, 3 பத்திரிகைகள் அவையின் நடவடிக்கைகளைப் பற்றித் திரித்துக்கூறியதை உரிமைக் குழுவிற்கு அனுப்பி, உரிமைக் குழுவும் தனது அறிக்கையை முழுமையாகக்

கொடுத்திருக்கிறது. இரண்டொரு நாட்களில் இங்கே அதை வைக்க இருக்கிறோம். இதற்குப் பிறகு பத்திரிகைகள் இந்த அவையினுடைய நடவடிக்கைகளைத் திரித்து வெளியிடுவதென்பது எவ்வளவு பெரிய குற்றம் என்பதை நீங்கள் தெரிந்துகொள்ள முடியும். தன்னாட்சி மிக்க ஒரு அவையைப் பற்றி இப்படித் திட்டமிட்டுச் செய்கிற பத்திரிகைகள், பத்திரிகைகளுக்கு இருக்கிற உரிமை என்கிற வகையில் இன்னொரு தன்னாட்சி மிக்க அமைப்பான நீதித்துறையைப் பற்றி ஏதாவது மூச்சு விடுகிறீர்களா என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு அவ்வளவு பயப்படுகிறார்கள். ஆனால் இங்கே நடக்காத சம்பவங்களை நடந்ததாக எழுதுவது அல்லது நடந்ததைத் திரித்து எழுதுவது என்பது எவ்வளவு பெரிய தவறான காரியம் என்பதைப் பத்திரிகையாளர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தொடர்ந்து இத்தகைய திசை திருப்பும் முயற்சியில் பத்திரிகைகள் சட்டமன்றப் பேரவையைப் பொறுத்தமட்டில் ஈடுபடலாகாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்திய ஜனநாயகத்தில் சட்டமன்ற, நாடாளுமன்ற மரபுகள் நாளைக்குத் தகர்த்து எறியப்பட்டால் நீங்கள் விரும்புகிற அந்தப் பத்திரிகைச் சுதந்திரம் என்னவாகும் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) பத்திரிக்கைச் சுதந்திரம் என்ற அந்த ஒரே ஒரு கருத்தை மட்டும் நீங்கள் வைத்துக்கொண்டு, இந்த அவையைக் கொச்சைப்படுத்துகிற முயற்சி அல்லது பாராளுமன்ற மரபுகளைக் கொச்சைப்படுத்தி பொது மக்கள் மத்தியில் தவறான எண்ணத்தை உருவாக்குவது பத்திரிகை சுதந்திரத்தையும் சேர்த்து அழிக்கிற முயற்சியாக அமையும் என்பதைப் பத்திரிகையாளர்கள் புரிந்துகொண்டு, அவையின் நடவடிக்கைகளை முறையாகவெளியிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

2. மானியக் கோரிக்கைகள், 1992-93 விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

(இ) கோரிக்கை எண் 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள்.

(ஈ) கோரிக்கை எண் 49—குடிநீர் வழங்கல்.

(உ) கோரிக்கை எண் 50—நகராட்சி நிருவாகம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,